—பாரதி விழா—

124



# மரணத்தை வென்ற மகாகவி

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

14.—09—2003

கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வென்ற மகாகவி

1988 ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ் சங்கம் நடத்திய அனைத்திலங்கை உயர்நிலைக் கவிதைத் தேர்வில் பரிசு பெற்ற கவிதை


ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

(துணைத்தலைவர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்)


## பாரதிவிழாச் சிறப்பு வெளியீடு

14.09.2003


கொழும்புத் தமிழ்ச் சங்கம்

7, 57 வது ஒழுங்கை கொழும்பு-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வென்ற மகாகவி

## காப்பு

### வெண்பா

செந்தமிழைக் காத்த திருமகனாம் பாரதியைச்
சொந்தமெனக் கொண்டேனென் பாவினுக்குச் - சிந்தையிலே
தங்குதடை இன்றித் தமிழூறச் செய்தருள்வாய்
எங்கும் நிறைந்தவனே காப்பு

### எழுசீர் விருத்தம்

பாரதி பிறந்தநூ றாண்டின்று வவன்புகழ்
பாடாத நாவும் நாவோ
மார்தட்டிச் சுதந்திர தாகத்தை ஊட்டியவன்
மறந்திடும் மனமும் மனமோ
கார்குழல் மாதர்விடு தலைக்கெனப் பாடினான்
கேட்காத செவியுஞ் செவியோ
ஏரெனத் தமிழ்கொண்டு இதயத்தை உழுதவன்
இணையிலாப் பார தீயே. 1

* *

நெஞ்சிலே உரங்கொண்டு நீசரை எதிர்த்தவன்
நெருப்பென வீர உணர்வை
அஞ்சாது இளைஞரின் அகத்தினின் மூட்டிய
ஆற்றல்மிகு சொல்லே றுழவன்
துஞ்சாது சுதந்திர தாகத்தால் அலைந்தவன்
துணிவுமிகு வீரத் தமிழன்
பிஞ்சுமனந் தனிலுமுயர் போதங்கள் விதைத்தவன்
புரட்சிக்கவி பார தீயே. 2

* *

"நாமிருக்கும் நாடுநம தேய"தன் மன்னர்கள்
நாமெனப் பாடி இங்கு
"நாம்யார்க்கும் அடிமையாய் வாழ்ந்திடோம்" என்றவன்
நாடறியக் குரல்கொ டுத்தே
ஏமாந்து வாழ்ந்தோரை இழித்துரைத் தானவன்
எவருக்கும் அஞ்சி டாதான்
பூமாத லத்தினிற் பெரும்புகழ் கொண்டவன்
புரட்சிக்கவி பார தீயே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினிற் பற்றுமிகக் கொண்டவன் பிறரவன்
நாடாளப் பொறுத்தி டாது
பாட்டினால் உணர்ச்சியைத் தூண்டி னான்மக்கள்
புரட்சிக்கே வித்து மிட்டான்
ஏட்டினில் எழுதியவை இசையோடு பாடியவை
எண்ணியநல் லெண்ண மெல்லாம்
நாட்டினோர் சுதந்திர வேட்கையைத் தூண்வே
நற்கவி பார தீயே 4

* *

அன்னியன் வந்தெமை ஆளநாம் அவன்பதம்
அண்டியே வாழ்வ தாமோ
சென்னியைப் பிடித்தவன் திசைநோக்கி ஓடிடச்
செய்வதெம் கடமை இலையோ
முன்னரெம் முன்னோர்கள் வாழ்ந்தநிலை மறந்தின்று
முறைகெட்டு வாழ லாமோ
"தன்மான முள்ளநற் றமிழனே விழி"யென்ற
தலைவனே பார தீயே 5

* *

"தனியொரு மனிதனுக் குணவில்லை யாகிலித்-
தரணியை அழித்து விடுவோம்"
எனக்குரல் கொடுத்தவன் ஏழைகள் வாழ்வினில்
இரக்கமுங் கொண்ட சீலன்
மனுக்குலம் உயர்ந்திட மார்க்கங்கள் சொன்னவன்
மாபெரும் அறவு மேதை
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவுயர்
தமிழனே பார தீயே. 6

* *

பொருள்சேர்க்க வேண்டுமெனும் பொருட்டாகப் பாடல்கள்
புனையவே இல்லை மக்கள்
இருள்சூழ்ந்த வாழ்விலொளி ஏற்றவே பாடினான்
ஏழைகள் வாழ்வி லுய்ய
தருமங்கள் தனையெடுத் தோதினான் தகவிலார்
தாழ்வுறப் பாட்டி சைத்தான்
பெருமனங் கொண்டவுயர் பெருமகன் பாரதப்
பெருமைசொல் பார தீயே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகையின் மாடத்தில் மங்கையொடு நிலவொளியில்
மகிழுவோர் தனைத்த விர்த்தே
நாளெலாந் தெருவினில் நாதியற் றலையுவோர்
நலங்காண உடல்வ ருத்தித்
தோள்வலு முதலெனத் தொழில்செய்யும் மாந்தரின்
துயர்மாழ இரந்து வாழ்வோர்
தோழனாய் நின்றுகவி பாடினான் உலகோர்க்குத்
தூயகவி பார தீயே. 8

* *

சாதிவெறி கொண்டன்று வேதியர் உயர்வெனச்
சாதித்தி ருந்த விழிநாள்
சாதிகளு மில்லையவை யாவுமே பொய்யெனும்
சத்தித்தை நிலைநி றுத்தித்
தீதென்று தீண்டாமை தனைவெறுத் தகங்களில்
தெளிவினைப் புகுத்தி வைத்தோன்
வேதியனே தானெனிலும் நீதிதனைச் சொன்னகவி
வேந்தனே பார தீயே. 9

* *

தெய்வத்தின் மீதுபெரும் நம்பிக்கை கொண்டவன்
தெய்வங்கள் அனைத்தின் மீதும்
மெய்யாக அருள்கொண்டு பாடினான் பராசக்தி
மீதுபெரும் அன்பு கொண்டோன்
வையத்தி லேபக்கி இல்லாத பேர்களும்
வழிதிருந் துவரே சொன்ன
ஐயனாம் இப்புவி அனைத்தும் புகழுமடி
யானவன் பார தீயே 10

* *

இந்துமத தத்துவத்தை ஏற்றவன் தானென்றும்
இசுலாத்தை விதந்து ரைத்தான்
சிந்தையிலே கறையற்று யேசுவையும் நேசித்துச்
சிலுவையிலும் அன்பு கொண்டான்
பந்தமொடு புத்தனையும் பாடினான் பெரியோர்கள்
பலரையும் பாடி வைத்தான்
எந்தவோர் மதத்திலும் ஏற்றமே கண்டவன்
இறைநேசன் பார தீயே 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சுமனப் பிள்ளைகள் பேசுமொழி தன்னிலே
பிரியமாய்ப் பாட்டி சைத்தான்
அஞ்சாது வீரரென அவனியில் வாழ்கவென
அறிவுரை சொல்லி வைத்தான்
நஞ்சுடை எண்ணங்கள் நன்மனந் தன்னிலே
நாடாது செய்க வென்றான்
பஞ்சுபோல் மனங்கொண்டு பாடலால் உலகாண்ட
பாவேந்தன் பார தீயே. 12

* *

அகத்தினி லடங்கியே வாழ்வதே வேறிலை
அரிவையர் உரிமை என்றோர்
முகத்திரை கிழித்தவர் முன்பெண்கள் உரிமையை
முன்வைத்துப் பாட்டி சைத்தான்
செகத்தினில் ஆணுக்குப் பெண்சம மென்றுமே
சாற்றியவன் உண்மை கூறி
இகத்திலே மாதருளத் திலட்சிய வேட்கையை
ஏற்றிய பார தீயே. 13

* *

ஆண்துணை இழந்திடில் அடுத்தும் மணந்திட
அரிவையர்க் குதவ வின்னும்
மாண்புறும் இல்லறம் வயதுவந் தாலன்றி
மணவினை தவிர்ந்த லென்றும்
வேண்டிய பொழுதினில் விரும்பாத இல்லற
விலக்கலுக் குரிமை யோடு
ஆண்களும் பெண்களும் சமமாக வாழவும்
ஆசித்த பார தீயே 14

* *

பலமொழி கற்றவன் பண்டிதன் தமிழிலே
பற்பல அறிந்த மேதை
"இலவேறு மொழிதமிழ் போலினி தானதென"
இன்புற்று மகிழ்ந்த தமிழன்
பலநூறு பாடல்கள் பாடியே பாரினைப்
பாடலால் ஆண்ட அரசன்
நிலமீது சிலகாலம் வாழ்ந்தாலும் நின்புகழ்
நிலைக்குமே பார தீயே 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலங் கற்றறிந் தானவன் தமிழர்கள்
அன்னியன் மொழியின் மேலே
ஓங்கிடும் மோகத்தை வெறுத்தனன் மக்களின்
உணர்வினை மாற்று கின்ற
பாங்கினிற் பாடியே தாய்மொழி தன்னிலே
பற்றவர் கொள்ள வைத்தான்
ஓங்குபுகழ் கொண்டவன் உயிரோடு தமிழ்மொழி
ஒன்றிய பார தீயே 16

* *

பழகுதமிழ் கொண்டுகவி பாடினான் பாரதி
பண்டைய மொழித விர்த்தே
பிழைபடா திலக்கணம் பிசகாத ஓசைநயம்
பொருளோடு உணர்ச்சி யூட்டி
மழைபோல மக்களின் மனதாழம் அறிந்திழி
மாயையை ஒட்டி நல்ல
வழிகாணப் பாடினான் வாழ்வுநிலை உயரவே
வரகவி பார தீயே 17

* *

இலகுவாய் அனைவரும் அறிந்துமே தெளிந்திட
ஏற்றநல் வழிக ளோர்ந்து
இலகுமொழி வழக்கினை எழுத்தினிற் புகுத்தயே
ஏற்றமுங் கண்ட கவிஞன்
பலநூறு கவிஞரின் றவன்வழி தொடரவே
பாதையை அமைத்து வைத்தான்
பலநூறு ஆண்டுசென் றாலுமுன் புகழவர்
பாடுவார் பார தீயே 18

* *

கவியோடு நின்றுவிட வில்லையவன் தான்கொண்ட
கருத்தினைக் கதைக ளாக
நவமான நடையிலுரை நடையோடு கட்டுரைகள்
நாடறிய வரலாற் றின்நூல்
புவியினின் பொதுமொழி தனிலிருந் தெம்மவர்
புரிந்திடவும் மொழிபெ யர்த்தான்
இவையோடு பேச்சிலும் எடுத்துரைத் தானிணை
இல்லாத பார தீயே 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மண்ணினிற் பிறந்தவ ரனைவரும்
ஒருதாயின் பிள்ளை என்றே
இந்திய ரனைவரும் எண்ணிடில் ஒற்றுமை
எம்மிடை தோன்றும் அன்றேல்
வந்தவன் தொடர்ந்தெமை ஆளுவான் சுதந்திர
வாழ்வெமக் கில்லை என்றான்
சொந்தம் அனைவர்க்கும் பொதுவிந்த நாடென்று
சொன்னநம் பார தீயே 20

* *

பாரதியென் றாயிரம்பேர் இருந்தாலும் பிறந்தாலும்
பாரதிபோ லாகிடுவரோ
பாரதிபோ லாயிரம்தான் பாடினும் பாரதியின்
பாடல்போ லாகி விடுமோ
பாரதத்திற் பாரதிபோற் பாவலர்கள் பிறந்ததிலை
பாருலகி லும்மது போலாம்
பாரதத்தோர் விடுதலைக்குப் பாவிலுணர் வூட்டியே
பாடியவன் பார தீயே 21

* *

தூங்கியே கிடக்கின்ற தமிழரைத் தட்டியே
துணிவுறச் செய்த தமிழன்
ஏங்கித்த வித்தழ வைத்தெங்கோ வேகினான்
எல்லோரின் மனங்க ளுள்ளும்
நீங்காத இடத்தினைப் பெற்றென்றும் வாழ்ந்திட
நித்திய வரமுங் கொண்டோன்
வேங்கைபோல் சுதந்திர வெறிகொண்டு வாழ்ந்தவன்
வீரனாம் பார தீயே 22

* *

முப்பத்தோ டொன்பதே ஆண்டுகள் வாழ்ந்தவன்
முதுமையை அறிந்தி டாதான்
இப்புவி உள்ளவரை வாழ்பவன் என்றுமே
இறவாத புகழ்ப டைத்தோன்
ஒப்புயர் வற்றவன் கொள்கையால் மக்களை
உணர்ச்சிபெற் றெழவுஞ் செய்தான்
செப்பிடக் கூடுமோ செயல்வீரன் சேவைகள்
செம்மலே பார தீயே 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவழி வந்ததம் பெருமையைக் கூறியே
வாளாவி ருந்த பேர்க்கு
வழிவழி வந்ததமிழ் வீரவர லாறுதனை
விதந்துரைத் துணர்வு மூட்டி
வழிவழி வருவோரும் வாழ்ந்ததம் முன்னோரின்
வழிதொடர்ந் தேக வென்றே
வழிவகை சொல்லியே வாழ்ந்தவன் பெருங்கவி
வள்ளலே பார தீயே 24

* *

வாழ்கவவன் கொள்கைகள் வாழ்கவவன் கவிதைகள்
வாழ்கவவன் பிறந்த நாடு
வாழ்கவவன் புகழென்றும் வாழ்கவவன் சந்ததி
வழிவழி வாழி வாழி
வாழ்கதமிழ் பேசுவோர் வாழ்கதமிழ் வளர்ப்பவர்
வாழ்கதமிழ் வாழி வாழி
வாழ்கவே தமிழினம் வளர்கவவர் புகழிந்த
வையமே போற்ற வாழி 25

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்காதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணங்கஞ் செய்தல் வேண்டும்
- பாரதியார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
7, 57 வது ஒழுங்கை கொழும்பு-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org